பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் : 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : தை 16 (30—1—68) செவ்வாய் ★ வெளியூர் : தை 17 (31—1—68) புதன் [இதழ் : 189

மத்திய அரசின் நிலை என்ன?

சென்னை, சன. 30—
சன. 23-ந் தேதியன்று தமிழகச் சட்டப் பேரவை நிறைவேற்றிய மொழி பற்றிய தீர்மானத்தின் நகல் கடந்த சனியன்று இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

மத்திய அரசின் கருத்தை மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

தி. மு. க. ஆட்சியை மிரட்டிப்பார்க்கிருர் மொரார்ஜிதேசாய்!

'ஆங்கிலமும் இந்தியும் கட்டாயமாக வேண்டும்' என்கிருர் காமராசர்

மும்மொழித் திட்டத்துக்கு ஆதரவாகச் சிலர் — எதிராகச் சிலர்!

அ. இ. காங்கிரசுக் குழுக் கூட்ட விநோதக் கூத்து!

புதுடில்லி, சன. 30—

"தி. மு. கழக ஆட்சியால் உருவாக்கப்படும் எவ்வித அரசியல் முட்டுக்கட்டையையும் மத்திய அரசு சமாளிக்கத் தயார்" என்று மிரட்டியிருக்கிருர் மொரார்ஜி தேசாய்!

இன்று காங்கிரசு செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலம், காங்கிரசுத் தலைவர்களே இன்னும் குழப்பத்திலேயேதான் இருந்துவருகின்றனர் என்பதும், அவர்களுக்குள்ளேயே ஒருமித்த கருத்தோ தெளிவான எண்ணமோ இல்லை என்பதும் தெளிவாகிறது.

மொழிப் பிரச்சினை, நாட்டின் நலன் பாதிக்கப்படாத அளவுக்குத் தீர்க்கப்பட வேண்டும் என்ற அக்கறையோ, சர்ச்சைகளைத் தவிர்கக வேண்டும் என்ற எண்ணமோ அவர்களிடம் சிறிதும் காணப்படவில்லை!

இங்கு நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசுச் செயற்குழுக் கூட்டத்தில், 'மொழிப் பிரச்சினையைத் தி. மு. கழகம், அரசியல் இலாபமாக்கிக்கொண்டிருக்கிறது' என்று காமராசர் எச்சரிக்கை செய்தாராம். இப்பிரச்சினையை மத்திய அரசு சமாளிக்கமுடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்தாராம்.

"மத்திய அரசுப் பணியில் சேர விரும்புபவர்கள், இந்தியையும் ஆங்கிலத்தையும் கட்டாயம் படிக்க வற்புறுத்தலாம்" என்று காமராசர் யோசனை கூறினாராம். 'மத்திய அரசு ஊழியர் தேர்வுக்கு இந்தக் கட்டாய இரு மொழித் திட்டத்தைக் கடைபிடித்தால், மாநில அரசுகள் இந்தியையும் ஆங்கிலத்தையும் கற்பிக்க முன்வரும்' என்றும் அவர் கூறினாராம்.

ஆனால், மொரார்ஜி தேசாய், சி. பி. குப்தா, டாக்டர் இராம் சுபாக் சிங், பிரும்மானந்த ரெட்டி முதலியோர், மும்மொழித் திட்டத்தையே உறுதியாக ஆதரித்தனராம்.

"ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தின்படி, மத்திய அரசு அலுவல்களுக்கு இந்தி—ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைப் பயன்படுத்தும் கொள்கையையே அனுசரிக்க வேண்டும்" என்று காங்கிரசுச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மத்திய அரசில் வேலையில் சேருவோர் ஆங்கிலம் அல்லது இந்தியில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும் என்றும், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ருேர் வேலையில் சேர்ந்த பின் இந்தியிலும், இந்தியில் தேர்ச்சி பெற்ருேர் வேலையில் சேர்ந்த பின் ஆங்கிலத்திலும் அலுவல்களைக் கவனிக்கும் அளவுக்குப் பயிற்சிபெற வேண்டும் என்றும இந்தத் தீர்மானம் கூறுகிறது.

இந்த அடிப்படையில், பள்ளிகளில் மும்மொழித் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இருமொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளவர்கள மீது மும்மொழித் திட்டத்தைத் திணிப்பதால் வெறுப்புணர்ச்சிதான் வளரும் என்றும், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ருல் மத்திய அரசில் வேலை கிடைக்கும் என்றிருக்கும்போது, மற்ருெரு மொழியைக் கற்க வேண்டிய அவசியமில்லை என்றும் சிலர் கருத்தறிவித்தனராம்.

இந்தி பேசும் பகுதி மாணவர்கள் ஒரு தென்னிந்திய மொழியைக் கற்பதால் பயன் எதுவும் விளையப் போவதில்லை என்றும், அதனுல் நடைமுறையில் எவ்விதப் பலனும் இருக்காது என்றும் இதனுல் வீண் செலவுதான் ஏற்படும் என்றும் கூறப்பட்டதாம்.

இரு மொழித் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பது உண்மையானுல், ஒவ்வொருவரும் இந்தியும் ஆங்கிலமும் கட்டாயம் படிக்குமாறு வற்புறுத்தப்பட வேண்டும் என்றும் கருத்தறிவிக்கப்பட்டதாம்.

தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மொழித் தீர்மானம் ஒரு புதிய நிலையை உருவாக்கியுள்ளதாகச் சில உறுப்பினர்கள் கருதினராம்; இதுபற்றி நடவடிக்கை மேற்கொள்வதை உள்துறையமைச்சரிடமே விட்டுவிடுவதென்றும் முடிவு செய்தனராம்.

மொழிச் சிக்கலில் தீர்வு காணும் பொறுப்பை மத்திய அரசிடமே விட்டுவிட வேண்டும்—என்ற கருத்தும் செயற்குழுவில் தெரிவிக்கப்பட்டதாம்.

இன்று காலை நடந்த செயற்குழுக் கூட்டத்தில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி கலந்துகொள்ளவில்லை. சோவியத் தலைமையமைச்சர் கோசிஜினுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்ததே அவர் கலந்து கொள்ளாததற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்திரா காந்தி நேற்றையக் கூட்டத்தில் கலந்து கொண்டார் என்றும், எனவே, இன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றி அவருக்குத் தெரியும் என்றும் திரு. சாதிக் அலி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தி பேசுவோருக்கும்—இந்தி பேசாதவர்கட்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வை, அகற்ற இந்தத் தீர்மானம எந்த அளவுக்குப பயன்படும் என்பதை திரு. சாதிக் அலி விரிவாக விளக்கவில்லை.

ஒரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், 'அந்தச் சுமையைக் குறைக்க உள்ள ஒரே முயற்சி மும்மொழித் திட்டம் தான்' என்ருர்!

இதன் மூலம் எப்படிச் சுமை சமமாக்கப்படும் என்பது குறித்தும் அவர் விளக்கவில்லை!

இந்திரா காந்தி வரும்போது வகுப்புக்குச் செல்லமாட்டோம்!

கேரள மாணவர்களின் 'இந்தி எதிர்ப்பு' நடவடிக்கை

திருவனந்தபுரம், சன. 30—

பிப்ரவரி 2-ஆம் நாள், தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி இங்கு வருவதையொட்டி, மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல், 'இந்தி எதிர்ப்பு நாள்' அனுசரிப்பது என்று, கேரள மாணவர் இந்தி எதிர்ப்புக் குழு முடிவு செய்து அறிவித்துள்ளது.

தமிழக அரசின் இரு மொழிக் கொள்கையை இக்குழு பாராட்டி வரவேற்றுள்ளது.

தலைமறைவு நாகர்கள் 500பேர் வெளியேற்றம்

செஞ்சீனுவுக்குச் செல்வதாகத் தகவல்!

இம்பால், சன. 29—

தலைமறைவு நாகர்கள் சுமார் 500 பேர் இரண்டு குழுவினராக, வட கிழக்கு எல்லைப்புறப் (நேபா) பகுதியின் எல்லை மாவட்டமான திராப் மாவட்டத்துக்குச் சென்றுவிட்டதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

அவர்கள் இந்த வழியாக, கம்யூனிஸ்டுச் சீனுவுக்குச் செல்ல இருப்பதாக, அதிகாரபூர்வமான செய்தி கிடைத்துள்ளதாம்.

தலைமறைவு நாகர்கள் அரசின் வெளிநாட்டுச் செயலாளர் எனக் கூறப்படும் திரு. ஐசக்கா என்பவர், ஏற்கனவே, செஞ்சீனுவுக்குப் புறப்பட்டு, திராப் எல்லையைக் கடந்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

தலைமறைவு நாகர்களின் 'படைத் தளபதி'யான மாஸ் அங்காமி என்பவரும் இந்த மாதத் துவக்கத்தில் நாகாலாந்தில் உள்ள மொக்கோசங் பகுதியில் காணப்பட்டாராம். தற்போது அவரைப் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லையாம். அவர், மேல் பர்மாப் பகுதிக்குச் சென்றிருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றன.

நாகாலாந்து தேசியக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட வெளிநாட்டுக்காரர் ஒருவர்—அவர் ஓர் அமெரிக்கராகத்தான் இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது—கொடுத்த அறிக்கையின் உண்மைத் தன்மைகளை நாகாலாந்து அரசு ஆராய்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த வெளிநாட்டுக்காரர் அசாமில் எங்கோ தங்கியிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

அசாமிலும் இந்தி எதிர்ப்பு

இந்தித் திரைப் படங்களுக்கு எதிராக மாணவர்கள்

இந்தித் திரைப் படங்களைத் திரையிடுவதற்கு அசாம் மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அசாம் மாணவர்கள் இப்போதுதான் முதன் முறையாக இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 24-ஆம் நாள் அவர்கள் அசாம் சீரமைப்பு நாள் கொண்டாடியபோது, இந்தி, ஆங்கிலம், வங்காளி ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகளையெல்லாம் அகற்றினர்.

மத்திய அரசில் வேலை வாய்ப்பு

அமைச்சர் விளக்கம்

மதுரை, சன. 29—

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆட்சி மொழித் திருத்தச் சட்டப்படி, 'மத்திய அரசாங்க வேலை வாய்ப்புக்குரிய தேர்வுகளை, மாணவர்கள், ஆங்கிலத்திலோ அல்லது இந்தியிலோ எழுதலாம்' எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"அதன்படி, தமிழ் நாட்டு மாணவர்கள், மத்திய அரசின் வேலை வாய்ப்புத் தேர்வுகளை ஆங்கிலத்தில் எழுதலாம்.

"ஆகவே, மும்மொழித் திட்டத்தைக் கைவிட்டதால், தமிழ் நாட்டிற்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படாது"

என்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கியுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கு ரூ. 59,850 கோடி!

அமெரிக்காவின் படைச் செலவு

அமெரிக்க வரவு—செலவுத் திட்டம் இந்த ஆண்டில் 18,610 கோடி டாலர் (ரூ. 139,575 கோடி) ஆகும்; இதில் பாது காப்புச் செலவு மட்டும் 7,980 கோடி டாலர் (ரூ. 59,850 கோடி) ஆகும்.

நடைமுதல் ஆண்டில் துண்டு விழுந்த தொகை 1,980 கோடி டாலர். இவ்வாண்டு எதிர்பார்க்கப்படும் துண்டுத் தொகை 80 கோடி டாலர்.

வருமான வரிமீது 10 சதவிகிதம் கூடுதல் வரி விதிக்கப்படும் என்ற அடிப்படையில், வரவு—செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது; ஆனுல் இப்பிரேரணைக்குக் காங்கிரசின் ஒப்பந்தம் இன்னும் கிடைக்கவில்லை.

"வரி உயர்வுக்கு இசையாவிடில் ஏழாண்டுகளாக நிலவிவரும் வளமை மிக்க நிலை திடீரென மாறி பொருளாதார சீரழிவு ஏற்படும்" என்று அமெரிக்கத் தலைவர் ஜான்சன் எச்சரித்துள்ளார்.

மத்திய அரசின் புதிய ஞானேதயம்!

புதுடில்லி, சன. 30—

அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடை தருவதைத் தடை செய்ய மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. வரவு—செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் இதற்காக ஒரு மசோதா கொண்டுவரப்படுமாம்.

1200 பேர் கைது!

மேற்கு வங்கத்தில் கோஷ் சர்க்கார் பதவியேற்றதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மாநிலத்தின் பல பகுதிகளில் கூட்டணி நடத்திவரும் சட்டமறுப்பு இயக்கத்தின் மூன்ருவது நாளான இன்று மொத்தம் 1,200 பேர் கைது செய்யப்பட்டனர்; இவர்களில் 40 பேர் பெண்களாவர்.

அலுவலகங்கட்கு இந்திப் பெயரிட அதிகாரிகள் விரும்பவில்லை!

இந்தி தொலைபேசி அட்டவணைக்குக் கிராக்கி இல்லை

புதுடில்லி, சன. 28—

அஞ்சல்துறை தயாரித்துவரும் இந்தி தொலைபேசி அட்டவணையில் இடம்பெறும் வகையில், இப்போது ஆங்கிலப் பெயர்களில் வழங்கும் அரசு அலுவலகங்களுக்கு இந்தியில் பெயர் சூட்ட ஏற்பாடாகி வருகிறது ஆனால், ஆங்கிலப் பெயர்களுக்குப் பதில் இந்திப் பெயர்களைச் சூட்டுவதில் தொடர்புடைய அலுவலகங்களின் அதிகாரிகள் ஆர்வம் காட்டவில்லை எனக் கூறப்படுகிறது.

அஞ்சல்—தந்தித்துறை, இந்தி—ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமே தனித்தனியாக தொலைபேசி அட்டவணைகள் வெளியிடும்; ஆனால், இந்தி அட்டவணையில் மொத்தம் 18 000 பிரதிகள்தான் அச்சிடப்படும். ஆங்கில அட்டவணையோ, மொத்தம் 1,15,000 பிரதிகள் அச்சிடப்படவிருக்கின்றன.

பெரும்பாலான பெரிய நகரங்களில் இந்தியைக் காட்டிலும் ஆங்கிலத்துக்குத்தான் பெருவாரியான ஆதரவு இருந்துவருகிறது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இந்தி அட்டவணையில், அலுவலகங்களுக்கு இந்திப் பெயர்களை வெளியிடுவதோடுகூடவே அடைப்புக் குறிகளில் அவற்றின் ஆங்கிலப் பெயர்களையும் வெளியிட அஞ்சல்—தந்தித்துறை முடிவு செய்துள்ளது. இந்திப் பெயர்களால் மக்கள் குழப்பமடைவதைத் தவிர்க்க அவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

ஆங்கில அட்டவணையைக் காட்டிலும் இந்தி அட்டவணைகளை வெளியிடுவதில் அதிகம் செலவாகும். ஆங்கில எழுத்துக்களுக்கான அச்சுக்கள் மிகச் சிறியனவாக இருக்கும்; இந்தி எழுத்துக்களின் அச்சுக்களோ அவற்றைவிடப் பெரியனவாகவே உள்ளன. இதன் காரணமாக ஆங்கில அட்டவணையைவிட இந்தி அட்டவணைக்கு அதிக அளவில் காகிதங்கள் வாங்க வேண்டியிருக்கும்.

அ. இ. காங்கிரசுத் தலைமையகம்

நிஜலிங்கப்பா இருக்கும் இடத்திற்கே வருகிறது!

புதுடில்லி, சன. 29—

காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவின் தேவையை முன்னிட்டு, அனைத்திந்தியக் காங்கிரசின் தேசீயத் தலைமை அலுவலகம் இரண்டாண்டுகளுக்குள் பெங்களூர் நகருக்கு மாற்றப்படலாம் எனத் தெரிகிறது.

நாடாளுமன்றக் கூட்டத்தை அவ்வப்போது பெங்களூர் நகரில் நடத்தலாம் என்று தென்னகக் காங்கிரசு உறுப்பினர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள்; ஆனால், இந்த யோசனை ஏற்கப்படவில்லை; எனவே, காங்கிரசுக் கட்சியின் தலைமையகத்தையாவது பெங்களூரில் சிறிது காலத்திற்குச் செயல்படச் செய்ய சில முக்கியக் காங்கிரசுத் தலைவர்கள் விரும்புகிறார்கள்.

இந்திராவுக்கு பிடிக்காத செயற்குழு!

புதுடில்லி, சன. 29—

காங்கிரசுச் செயற்குழு, தலைமை அமைச்சர் இந்திரா காந்திக்குச் சிறிதும் பிடிக்காத முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது!

"இதற்குமுன் ஒரு முறை, இந்தி வெறியர் புருஷோத்தம் தாஸ் தாண்டன் காங்கிரசுத் தலைவராக இருந்து அமைத்த காங்கிரசுச் செயற்குழுவில் சேர நேருவும், ஆசாத்தும் மறுத்துவிட்டனர்; அதுபோல் இந்திரா காந்தியும் செய்யத் துணிவாரா?" என்று அரசியல் வட்டாரத்தில் கேட்கப்படுகிறது.

கட்சித் தலைவர்களுடன் 'முரண்' செய்துகொள்வதற்கும் இந்திரா விரும்பவில்லை! கட்சித் தலைவர்கள் ஏதேனும் ஆபத்து விளைவித்தால், வலதுசாரி அரசியல் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து அமைச்சரவை அமைப்பதற்குப் பதிலாக மறுதேர்தல் நடத்த இந்திரா காந்தி விரும்பலாம் எனத் தெரிகிறது.

காமராசருக்கு புதிய பதவி!

அரசுத் தொழிற்சாலையின் தலைவராவார்?

புதுடில்லி, சன. 29—

தென்னகத்தில் உள்ள மிகப் பெரிய அரசு நிறுவனங்களுள் ஒன்றின் தலைமைப் பதவியை ஏற்குமாறு காமராசரை, தலைமையமைச்சரும் மத்தியத் தொழில் வளர்ச்சி அமைச்சரும் கேட்டுக்கொள்வார்கள் என்று நம்பகமாகத் தெரிகிறது.

'இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ்' மற்றும் 'ஹெவி எர்த்மூவர்ஸ்' என்னும் அரசு நிறுவனங்களின் தலைவர் பதவி காமராசருக்கு வழங்கப்படக்கூடும்!

தேசீயமயமாக்கப்பட்ட தொழில் நிறுவனங்களைக் காங்கிரசுக் கட்சியிலுள்ள இடதுசாரியினரின் பொறுப்பில்விட மத்திய அமைச்சரவை ஆலோசித்து வருகிறது.

இலஞ்ச ஊழலில் ஈடுபட்ட அலுவலர்களுக்குத் தண்டனை

சென்னை, சன. 29—

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களின்மீது, 1967 செப்டம்பர் 30-ம் நாளுடன் முடிந்த காலாண்டுக் காலத்தில் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் விவரம் வருமாறு:—

ஒரு நிர்வாகப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), ஒரு சாலை ஆய்வாளர் (பெருவழி மற்றும் கிராமப் பணித்துறை) ஆகியோர் பதவியிலிருந்து தள்ளப்பட்டனர்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டர், ஒரு போலீசு கான்ஸ்டபிள், ஒரு வனப் பணியாளர், ஒரு வனக் காப்பாளர், ஒரு பாத்தி கண்காணிப்பாளர், ஒரு வருவாய் ஆய்வாளர் ஆகியோருக்கு நீதிமன்றத்தில் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஒரு துணை வர்த்தக வரி அதிகாரி, ஒரு போலீசு இன்ஸ்பெக்டர், ஒரு தலைமைக் கான்ஸ்டபிள் ஆகியோருக்குக் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது.

ஓர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர், ஒரு போலீசு கான்ஸ்டபிள் ஆகியோருக்குச் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது.

ஒரு தலைமைக் கான்ஸ்டபிளின் தகுதிகாண் பருவம் நிறுத்திவைக்கப்பட்டது.

ஒரு தலைமைக் கான்ஸ்டபிள், இரு எழுத்தர்கள் ஆகியோருக்குச் சம்பளக் குறைப்பு செய்யப்பட்டது.

தமிழகத்தின் முடிவு நாடு சிதைவதைத் தடுக்கும் முடிவு!

இந்தி வெறியர்கள் ஆங்கிலத்தின் சிறப்பைப் புரிந்தவர்கள் தான்-ஆனால் உள்நோக்கம் வேறு!

வங்காளி ஒருவரின் கருத்துரை

28—1—68-ம் நாள் 'இந்து' இதழில், லாமுயல் கில்பர்ட் மண்டல் என்ற வங்காளி ஒருவர், 'ஆசிரியர் பகுதி'க்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் இது:—

தமிழகப் பள்ளிகளின் பாடத் திட்டத்திலிருந்து இனி இந்தி அறவே எடுபடும்—என்று தமிழக அரசு செய்திருக்கும் துணிவான முடிவு, மிகச் சரியான ஒன்று. இதற்காகத் தமிழக மக்களையும் தமிழக அரசையும் பாராட்டுகிறோம்.

இப்பொழுதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை; இந்தி பேசாத மாநிலங்களின் தலைவர்களும், அறிஞர்களும் இந்தப் பிரச்சினையில் முனைந்து கவனம் செலுத்தினால்,

தமிழகத்தின் முடிவே நாடு சிதைந்து 'சின்னபின்ன'மாவதைத் தடுக்கும் முடிவு என்பது புலனாகும்.

ஏதோ சில எலும்புத் துண்டுகளுக்காக, இந்தியைத் தம் மக்கள்மீது திணிக்க இந்தி பேசாத மாநிலங்கள் ஒப்புக்கொண்டிருப்பது உள்ளபடி வேதனையானது!

வேண்டுமென்றோ தங்கள் நலனைக் கருதியோ ஒரு உண்மையை மட்டும் அவர்கள் மறந்து போகிறார்கள்.

வடக்கே இருக்கிற ஆங்கில வெறுப்பாளர்கள் ஆங்கிலத்தை மனமார வெறுக்கவில்லை; மாறாக, இப்போதைய இந்திய அமைப்பில் ஆங்கிலத்தின் சிறப்பு அவர்களுக்கு மிக நன்றாகப் புரிந்திருக்கிறது.

வடக்கே இன்றைய நிலையில் வசதி மிக்க—வளமுள்ள சிலர்தாம், ஆங்கிலத்தில் புலமை பெற முடிகிறது! இந்தச் சிலர்தாம், அரசியல் சட்டப்படி அமையும் சில சிறப்பான பெரும் பதவிகளில் அமர்ந்து நாட்டின் தலைவிதியை எழுதுகின்ற வாய்ப்புப் பெற்றவர்கள் ஆகிறார்கள்! அவர்கள் பதவி விலகும்போது, அவர்களைப் போன்ற வேறு சிலரே அவற்றைக் கைப்பற்றிக் கொள்கிறார்கள்!

ஆங்கிலத்தை இந்தியாவில் நீடிக்கவிட்டு வளரவும் வகை செய்தால், பிறகு, வசதி படைத்த இந்த விளையாட்டுக் கும்பல், தங்கள் ஏக போகத்தை இழந்து—உழைத்து வாழும் நாட்டு மக்கள் அனைவருடனும் போட்டியிட்டு இந்தப் பதவிகளைப் பெற்றாக வேண்டும்.

மாறாக, ஆங்கிலத்தை இந்தியாவில் இருந்தே ஒழித்துவிட்டால், வசதிமிக்க இந்தச் செல்லப் பிள்ளைகள், தம் குடும்பத்துச் செல்வங்களைச் சீமைக்கு அனுப்பிப் படிக்கவைத்து—பல துறைகளிலும் தேர்ந்த கலைஞானம் பெறச் செய்து—அந்தத் தனிச் சிறப்பின் மூலம் அரசியல் அரங்கில் பெரும் பொறுப்புக்களைக் கைப்பற்றிக் கொள்ளலாம் அல்லவா?

இதுதான், வடக்கே இருக்கும் இந்தி வெறியர்கள் அல்லது ஆங்கில எதிர்ப்பாளர்களின் உள்நோக்கம்!

இந்திய மண்ணில் வாழும் கோடானுகோடி ஏழை மக்கள், தம் தாய் மொழி மூலம்—தாய் மொழிகள் வளராத இன்றைய நிலையில்—பெறுகின்ற மிகச் சாதாரண அறிவுடன், வெளி நாடு சென்று பயின்று திரும்பும் இந்தச் செல்லப் பிள்ளைகளோடு போட்டி போடுவது எங்கே?

ஆகவேதான், 'இந்தியே வேண்டாம்' என்று தமிழகம் செய்திருக்கும் புதுச் சட்டம், 'தொலை நோக்கோடு செய்த முறையான சட்டம்' என்று நாங்கள் கருதுகிறோம்.

சிறுபான்மைக் கும்பலான இந்திக்காரர்களின் எடுபிடிகளாக இல்லாமல், எல்லாருடனும் சரிசமமாக இந்த மண்ணில் வாழ வேண்டுமானால், இந்தச் சட்டத்தை இந்தி பேசாத மாநிலங்கள் முழுமனத்துடன் ஆதரித்தாக வேண்டும்.

மாவட்டங்கள்தோறும் தி.மா.மு.க. அமைப்பாளர்கள்

பொதுச்செயலாளர் சோமசுந்தரம் அறிக்கை

சென்னை, சன. 26—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. அறிவிப்பதாவது:—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பாளர்கள் கூட்டம், தி.மா.மு.க. பொதுச்செயலாளர் தலைமையில் 21-1-68 அன்று நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும் தி.மா.மு. கழகத்தைக் கல்வி நிலையங்கள் தோறும் நிறுவுவதற்கும் கீழ்க் கண்டவாறு மாவட்ட அமைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

சென்னை மாவட்டம்

கே. நிலவழகன்
எம். எல். எஸ், எம். புகாரி
க. அ. நடராசன்
உடையப்பன்
முரசொலி செல்வம்
இரா. சனார்த்தனம்

செங்கற்பட்டு

சி. தியாகராசன்

வட ஆற்காடு

துரை முருகன்

தென் ஆற்காடு

கு. செயராமன்
ப. கணேசன்
மு. நடராசன்

தஞ்சை

சுப்பிரமணியம்
சுந்தரமூர்த்தி

திருச்சி

ஜி. இராசு
முத்துசாமி

இராமநாதபுரம்

தி. க. சீனிவாசன்
வை. சாத்தையன்

மதுரை

மு. இராசாமணி
இராசேந்திரன்

கோவை

அரங்கராசன்

சேலம்

மா, அய்யாசாமி
சு. மோகன்ராசு

மாணவர் மாநாடு நடத்துவதற்கும், மாவட்ட அமைப்புக்களை விரிவுபடுத்துவதற்கும், மாணவர் கழகத்திற்கும் — அரசியலுக்கும் உள்ள தொடர்புகளையும், மாணவர் கழக எதிர்காலம் பற்றியும், அறிஞர் அண்ணா அவர்களிடம் ஆலோசனை நடத்தவும், கீழ்க் கண்டவர்கள் பொறுப்பாளர்களாகத் தீர்மானிக்கப்பட்டது:—

சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்கள்:—

நாவளவன்

தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்கள்:—

எம். எஸ். வெங்கடாசலம்

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள்:—

காளிமுத்து

கோவை, சேலம், தர்மபுரி, நீலகிரி மாவட்டங்கள்:—

என். ஆர். நடராசன்

தி. மா. மு. கழகத்தின் பொறுப்பாளர்களாகிய நாவளவன், எம். எஸ். வெங்கடாசலம், காளிமுத்து, என். ஆர். நடராசன் ஆகியோர் அறிஞர் அண்ணா அவர்களுடன் ஆலோசனை செய்து, கழகத்தில் புதிய மாற்றம் ஏற்படுத்தித் தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சிங்களத்துடன் தமிழ்!

இலங்கை அரசு கட்டளை

கொழும்பு, சன. 28—

எல்லா அரசினா கருவூலங்களுக்கும் இலங்கை அரசு அனுப்பியுள்ள கட்டளையில், 'ஒவ்வொரு கருவூலத்தின் சுற்றறிக்கையோடும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பும் அனுப்பப்படவேண்டும்' என வலியுறுத்தியுள்ளது.

கடந்த இரண்டாண்டுக் காலத்தில் அனுப்பப்பட்ட—தற்போது செயற்பாட்டில் உள்ள சுற்றறிக்கைகளுக்கும் தமிழ் மொழி பெயர்ப்புக்களை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

தமிழும் இந்தியும் இரு ஆட்சிமொழிகள் ஆகட்டும்!

சமநிறைத் தீர்வுக்கு ஒரேவழி அதுதான்!

மொழிப் பிரச்சினையில் புதிய சிந்தனை!

"தமிழும் இந்தியும் சமநிலை பெற்ற இரு ஆட்சிமொழிகளாக ஆக்கப்பட வேண்டும். உலகின் மிகச் சிறந்த இலக்கியச் செம்மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நான்கு மொழிகளுள் தமிழும் ஒன்று. தமிழ் ஓர் உலக மொழியும்கூட; ஏனென்றால், இலங்கை, மலேசியா ஆகிய இரு வேறு நாடுகள் தமிழைத் தங்கள் ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன; ஆகவே, தமிழுக்கு 'இந்திய ஆட்சிமொழி' என்ற நிலை உருவாவதில் புதுமை ஒன்றும் இல்லை!"

கிரேஸ் அலெக்சாண்டர் என்பார், 27—1—68-ம் நாள் 'மெயில்' இதழில், 'மொழிச் சண்டை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மிகுந்த ஆராய்ச்சி முனைப்போடு, மத்திய அரசுத் தேர்வுகளில் மதிப்பெண்கள் வழங்குவது பற்றியெல்லாம் விவாதிக்கும் அந்தக் கட்டுரை, மொழிச் சிக்கலில் ஒரு புதிய சிந்தனையை உருவாக்குவதாக இருக்கிறது. அதன் சில பகுதிகளைத் தமிழாக்கிச் சுருக்கித் தந்திருக்கிறோம்.

ஆட்சி மொழி அல்லது இணைப்பு மொழிப் பிரச்சினை, முதலிடம் பெறும் நிலைக்கு வளர்ந்துவிட்டது.

எல்லா மக்களுக்கும் ஏற்புடைத்தான ஒரு தீர்வைக் காண நம் தலைவர்கள் முயலுகிறார்கள்.

பல மொழிகள் முன்னிற்பதாலேதான் பிரச்சினையே ஏற்படுகிறது; ஆனால் நம்முடைய நல்வாய்ப்பாக, இந்திய மொழிகள் அனைத்தும் இரண்டு மொழிக் குழுக்களுள் அடங்கிவிடுகின்றன.

1. வட இந்திய மொழிகள்—

   இந்தியும், அதோடு தொடர்புள்ள குசராத்தி, மராத்தி, பஞ்சாபி முதலியன.

2. தென்னிந்திய மொழிகள்—

   தமிழும் அதோடு தொடர்புள்ள மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு முதலியன.

இந்த இரண்டு மொழிக் குழுக்களுக்கும் பின்னே தனித்தனிப் பண்புகள், பழக்க ஒழுக்கங்கள், தாய்மொழிப் பற்றுக் கொண்ட கோடிக்கணக்கான மக்கள் இருப்பதைப் புறக்கணிப்பதற்கில்லை.

இன்னம் தெளிவாக, இந்த மொழிகள் வழங்கும் பகுதிகளை நான்காகப் பிரித்துவிடலாம்:—

1. இந்தி பேசும் பகுதி;
2. இந்தியோடு தொடர்புள்ள மொழிகள் பேசும் பகுதி;
3. தமிழ் பேசும் பகுதி;
4. தமிழோடு தொடர்புள்ள மொழிகள் பேசும் பகுதி.

நன்மையோ தீமையோ—நாம் காண முனைவது, இந்த நான்கு பகுதிகளுக்கும் சமநிறையானதாக அமைகின்ற தீர்வு!

தமிழும் இந்தியும் இந்தியாவின் இரு ஆட்சி மொழிகளானால் இந்தச் சிக்கல் எளிதில் விடுபடும்!

அதன்படி படிக்கவேண்டிய மொழிகள் இப்படி அமையலாம்:—

தமிழகம்:—

1. தாய் மொழி—தமிழ்
2. இரு ஆட்சி மொழிகளுள் ஒன்றான—இந்தி
3. விரும்பினால் ஆங்கிலம்

பிற தென் மாநிலங்கள்:—

1. தாய் மொழி
2. இரு ஆட்சி மொழிகளுள் ஒன்றான தமிழ்
3. விரும்பினால் ஆங்கிலம்

இந்தி மாநிலங்கள்:—

1. தாய் மொழி இந்தி
2. இரு ஆட்சி மொழிகளுள் ஒன்றான தமிழ்
3. விரும்பினால் ஆங்கிலம்

பிற வட மாநிலங்கள்:—

1. தாய் மொழி
2. இரு ஆட்சி மொழிகளுள் ஒன்றான இந்தி
3. விரும்பினால் ஆங்கிலம்

தம் தாய் மொழியை ஆட்சி மொழியாகப் பெற்றவர்கள் இன்னொரு ஆட்சி மொழியைப் படிக்கிறார்கள்; தாய் மொழியை ஆட்சி மொழியாய்ப் பெறும் வாய்ப்பு இல்லாதவர்கள் தாய் மொழியோடு ஒட்டிய ஆட்சி மொழியையே படிக்கிறார்கள்; இதனால், தொல்லையும் குறைவு—பயனும் மிகுதி!

ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற எந்தத் திட்டத்தையும்விட, இந்தத் தீர்வு அனைவரையும் திருப்திப்படுத்தி, நாட்டு ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும்! இந்திக்காரர்கள் தமிழ் படிப்பர்—தமிழர் இந்தி படிப்பர்!

எல்லா மாநிலத்தவரும் தமிழ் அல்லது இந்தி படித்தால் நாடு முழுமையும் சென்று மக்களுடன் உரையாடி உறவாட முடியும்!

இது ஒன்றே சிறந்த தீர்வு ஆகும்!

சேலம் மாவட்ட தி. மா. மு. க.

உறுப்பினராக விழைவோர் கவனிக்க:

சேலம் மாவட்ட தி. மா. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேர நம்பும் மாணவமணிகள், விண்ணப்பத் தாளுக்குக் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு தி. மா. மு. க. செயலர் ஈ. இரகுபதி அறிவிக்கிறார்.

முகவரி:—
சு. மோகன்ராசு, பொருளர்,
13, குலசேகர ஆழ்வார் தெரு,
சேலம்-1.

இந்தியை ஒழித்த தமிழக அரசுக்குப் பாராட்டு

செந்தமிழ்க் கவிஞர் — எழுத்தாளர் பேரவை தீர்மானம்

செந்தமிழ்க் கவிஞர்—எழுத்தாளர் பேரவையின் செயற்குழுக் கூட்டம், சன. 24-ல், பேரவைத் தலைவர் டாக்டர் சி. இலக்குவனார் தலைமையில் திருவல்லிக்கேணி பெரிய தெரு, 18-எண்ணுள்ள இல்லத்தில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் சிறுவை ராகனசுந்தரம், அனைவரையும் வேற்றதுடன், தமிழகத்திலிருந்து இந்தி ஒழிந்தது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் வகைவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

கூட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக தமிழகத்திலிருந்து இந்தி ஒழிக்கப்பட்டு தமிழ் வாழ வழிவகுத்தும், தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களையும், தமிழக அரசினையும் பாராட்டி வாழ்த்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

தமிழுக்காக இந்தியை எதிர்த்துத் தம் இன்னுயிர் ஈந்த அனைவருக்கும் வீர வணக்கம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பேரவையின் துவக்க விழாவினை விரைவில் நடத்துவது என்றும், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களையும் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அவர்களையும் விழாவில் கலந்துகொள்ள அழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

தமிழகத்தில் தமிழில் வெளியாகும் நூல்களை திறனாய்வு செய்து, அறிவிப்பதற்காக 10 பேர்களைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இறுதியில் துணைச்செயலாளர் மா. செங்குட்டுவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

செய்திக்கு மறுப்பு

திருச்சியிலிருந்து வெளிவரும் 'தினமலர்' 22—1—68-ம் நாள் இதழில், 'இடது கம்யூனிஸ்டுகளுக்குக் சத்திக்குத்து'—'தி.மு.க.-தி.க. பிரமுகர்கள் தலைமறைவு' என்றும், 'கோகூர் தி. மு. க. பிரமுகர் எத்திராஜ் அவர்களைப் போலீசு தேடிவருகிறது' என்றும் செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

அச்செய்தியின்படி, தி. மு. கழகத்திற்கும்—கழகத்தைச் சேர்ந்த எத்திராஜ் அவர்களுக்கும் எந்த விதச் சம்பந்தமும் இல்லை என்பதுடன், எத்திராஜ் அவர்களைப் போலீசு தேடவில்லை என்பதையும், இது வேண்டுமென்றே தி. மு. கழகத்தையும்—எத்திராஜ் அவர்களையும் இணைத்துக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வெளியிடப்பட்ட செய்தியாகும் என்பதையும் கீழ்வேளூர் தி. மு. க. செயலாளர் கலையழகன் தெரிவித்துக்கொள்கிறார்.

நெய்வேலி 9-வது வட்ட அழகிரி நினைவு மன்றம்

அழகிரி நினைவுமன்ற உறுப்பினர் கூட்டம் 26—12—67 அன்று திரு. டி. பி. நயினார் தலைமையில் நடைபெற்றபோது, கி. சிவசங்குவை செயலாளராகவும், பி. சடகோபன் துணைச் செயலாளராகவும், கி. சுவாமி வரவு-செலவுக் கணக்குத் தணிக்கையாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கணக்கன்சத்திரம் எம். ஜி. ஆர். பொதுப்பணி மன்றம்

மாதவரத்தைச் சேர்ந்த கணக்கன்சத்திரத்தில் எம். ஜி. ஆர். பொதுப்பணி மன்றம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: அவனியின் அரசன்; செயலாளர்: த. பால்ராஜ்; துணைச் செயலாளர்: ந. வீ. ராகவன்; பொருளாளர்: கே. தங்கசாமி; வட்டப் பிரதிநிதி: பி. டேவிட்; விளம்பரச் செயலாளர்: டி. இராமகிருட்டிணன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 8 பேர்.

சிவகாசி எம். ஜி. ஆர் மன்றம்

சிவகாசி எம். ஜி. ஆர். மன்ற உறுப்பினர்கள் கூட்டம் நகரச் செயலாளர் ஏ. துரைக்கண்ணன் தலைமையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; விவரம்:—தலைவர்: பி. காளிராசன்; செயலாளர்: எஸ். அண்ணாமலை; துணைச்செயலாளர்: எஸ். சமுத்திரக்கனி; பொருளாளர்: வி. எஸ். இராதா மனோகரன்; செயற்குழு உறுப்பினர்கள்: கே. கே. சாமி, குருவையா, டி. வி. காளியப்பன், கந்தசாமி, முருகேசன், சங்கரன்.

சின்னாண்டி பாளையம் எம். ஜி. ஆர். மன்றம்

திருப்பூர் தொகுதி சின்னாண்டி பாளையத்தில், தோழர் மு. நாச்சிமுத்து தலைமையில் எம். ஜி. ஆர். மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: இரா. நாச்சிமுத்து; செயலாளர்: இரா. மாணிக்கம்; துணைச்செயலாளர்: நடராசன்; பொருளாளர்: நமச்சிவாயம்; துணைப் பொருளாளர்: துரைசாமி; ஐந்துபேர் செயற்குழு உறுப்பினர்கள்.

புதூர்—பள்ளிபாளையம் எம். ஜி. ஆர். மன்றம்

மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் கிருட்டினன் தலைமையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தோந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: எம். நாராயணன்; செயலாளர்: கே. எம். பழனியப்பன்; துணைச் செயலாளர்: ஆறுமுகம்; பொருளாளர்: எம். சுப்பிரமணி; செயற்குழு உறுப்பினர்கள் ஐந்து பேர்.

மன்றத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பெங்களூர்-வசந்தநகர் எம்.ஜி.ஆர். மன்றம்

கர்நாடக மாநில தி. மு. க. அமைப்பாளர் திராவிடமணி அவர்களால் பெங்களூர் வசந்த நகர் கலைக்காவலர் எம். ஜி. ஆர். மன்றம், 44-வது வட்ட தி. மு. க. கிளையாக மாற்றியமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: சீதாலட்குமி எம்.ஏ.; செயலாளர்: அருணாசலம்; துணைச்செயலாளர்: மி. பிரான்சிஸ்; பொருளாளர்: பாலன்; மாநிலப் பிரதிநிதி: அரிபாபு.

பொதுக்குழு உறுப்பினர் கி. சோழன் கொடியேற்றிவைத்தார்; தோழர் வேதகுமார், மன்றப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்; தோழர்கள் கே. சில்வர் கிறிஸ்டி, சேகர் ஆகியோர், கிளைக் கழகத்தின் செயல் திட்டங்களை விளக்கிப் பேசினர்.

புத்தூர் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்ற துவக்க விழா

ஆந்திர மாநிலம் புத்தூரில் எம் ஜி.ஆர். ரசிகர் மன்றத் துவக்க விழா, புத்தூர் தி.மு.க. அவைத் தலைவர் எம். கணபதி தலைமையில் நடைபெற்றது தி.மு.க.செயலாளர் இரா. சண்முகம் மன்றத்தைத் துவக்கிவைத்தார்; ஊர்வலத்திற்குப் பின், நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எம். கணபதி, இரா. சண்முகம் ஆகியோர் பேசினர்.

நிர்வாகிகள் விவரம்:—தலைவர்: பி. ஆர். சுப்பிரமணியம்; செயலாளர்: ஏ. ஈ. அப்பாதுரை; துணைச் செயலாளர்: என். எஸ். கணேசன்; பொருளாளர்: எஸ். கே. ஜெகன்னாதன்.

சிறுதாவூர் தி.மு.க.

சிறுதாவூர் தி.மு.க. நிர்வாகிகள் தேர்தல், செங்கற்பட்டு வட்டச் செயலாளர் செ. எ. பலராமன், திருப்போரூர் தி.மு.க. செயலாளர் முன்னிலையிலும் — கேளம்பாக்கம் தி. மு. க. செயலாளர் முன்னிலையிலும் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: துரைபாபு; செயலாளர்: சி. நா. உடையவர்லு; துணைச் செயலாளர்: ம. இராமன்; பொருளாளர்: சி. ச. கொண்டப்பா; வட்டப் பிரதிநிதி: சி. கோ. நரசிம்மலு; செயற்குழு உறுப்பினர்கள்: ஏழுமலை, வெள்ளியான், காசி, பாளையம், இராசு, நடேசன், கரப்பன், மாரி, கி. மாணிக்கம், கு. மாணிக்கம்.

மதுரை—செய்கிந்துபுரம் அண்ணா அறிவகம்

மதுரை செய்கிந்துபுரம் அண்ணா அறிவகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல், தோழர் இராம சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது செயலாளராக க. நடராசனும், துணைச் செயலாளராக துரை. சுந்தரராசனும், பொருளாளராக இரா. தியாகராசனும், வட்டப் பிரதிநிதியாக சி. சுப்பிரமணியமும், மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொதுக்கூட்டம்

இதன் முதலாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம், தோழர் பி. முருகேசன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் என். இலட்சுமணன், டாக்டர் கன்னையா, எழிலரசன், சி. சுப்பிரமணியம் ஆகியோர் பேசிய பின் தோழர் வெ. கண்ணன், தமிழகஅரசின் சாதனைகளையும், தி. மு. கழகத்தின் கொள்கைகளையும் விளக்கிப் பேசினார்.

செயலாளர் சி. சுப்பிரமணியம் நன்றி நவின்றார்.

சென்னை அமைந்தகரை அறிஞர் அண்ணா மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் விவரம் வருமாறு:—

தலைவர்: ந. வேதகிரி; செயலாளர்: நா. துவாரகநாதன்; துணைச்செயலாளர்: ஆர். என். கணேசன்; பொருளாளர்: ந. இராசாராம்.

சென்னை 58-வது வட்ட கலைஞர் கருணாநிதி மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்ட அண்ணா படிப்பகப் பொருளாளர் உஸ்மான் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

அவைத் தலைவர்: வில்லை முருகேசன்; செயலாளர்: எம். சண்முகம்; துணைச் செயலாளர்: ச. தமிழ்ச்செல்வன்; பொருளாளர்: கே. எம். இலட்சுமிபதி; மற்றும் 5 பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

மதுரை நகர் 2-வது வட்டார எம். ஜி. ஆர். படிப்பகம்

மேற்படி படிப்பக நிர்வாகிகள் தேர்தல் சன. 15-ல் மதுரை நகர் 1-வது வட்டார தி. மு. க. செயலாளர் ஏ. வி. இராசு தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

தலைவர்: மா. செல்லச்சாமி; செயலாளர்: ச. பூமிநாதன்; துணைச்செயலாளர்: ப. மாரிமுத்து; பொருளாளர்: ச. இராமன்; செயற்குழு உறுப்பினர்கள்: ச. மருதநாயகம், பே. பழனிச்சாமி, ப. மாசாணம், நா. கணேசன், பொ. பிச்சை, ப. வேலு.

கங்கைக் கரையினருக்கு அந்த உரிமை இல்லை!

காவிரிக் கரையில் உள்ளவர்களே தமிழர் கல்வி முறையைத் தீர்மானிக்கவேண்டும்

சேலம் வீர வணக்கக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஏ.மதியழகன் முழக்கம்

சேலம், சனி. 30—

"தமிழகத்தின் பாட மொழியை—பாடத் திட்டத்தைத் தீர்மானிக்கவேண்டியவர்கள் காவிரிக் கரையிலே உள்ளவர்களே தவிர, கங்கைக் கரையிலுள்ள வர்களல்லர் !

"கல்வி (பாட மொழி)யைத் தீர்மானிக்க வேண்டிய உரிமை மாநிலத்தைச் சேர்ந்தது ; கல்வி இந்த அரசு தீர்மானிக்கவேண்டிய கொள்கையே தவிர, மற்றவர் கள் தீர்மானிக்க நாங்கள் இடம்கொடோம் !"

இவ்வாறு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், சனி. 25-ல், சேலம் டோல் மைதானத்தில் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற வீர வணக்க நாள் கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினர். அவர் மேலும் கூறியதாவது :—

"தமிழக அரசின் சார்பாகவும்—அண்ணன்னின் சார்பாகவும், மூன்று குண்டுகளுக்கு முன் மொழிப் போரில் இறந்துபட்ட அனைவருக்கும் என் வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றுண்டுகளுக்கு முன், எங்கும் துப்பாக்கிச் சூடு—இரத்த வெள்ளம்—மானவர்கள் பிணமாகக் கப்பட்ட காட்சிகள் ! அண்ணன் மலே நகரிலே மானவர் இரகசிய திரள் சூட்டுக் கொல்லப்பட்டார் ! மதுரையில் அமைதியாக ஊர்வலம் சென்றுகொண்டிருந்த மானவர்களைக் காங்கிரசு அலுவலகத்திலிருந்து காங்கிரசுக் காரர்கள் சுத்தி, கட்டாரி கொண்டு தாக்கினார்கள் ; பல பேர் காயமடைந்தனர் !

காங்கிரசுக்காரர்களின் இந்தக் கொடூரமான செயலை மக்கள் மறந்துவிடவில்லை ! அவர்களின் கோபத் தீ, சென்ற பிப்ரவரித் திங்களில் அவர்களைச் சுட்டெரித்தது ! காங்கிரசு பொடிப் பொடியாக்கப்பட்டது !

அன்று மானவர்களைச் சந்தித்த மறுத்தார்—டுன்னுல் முதல்வர் பக்தவத்சலம் ! இன்று மானவர்கள் அன்பொரு அழைத்துப் பேசுகிறார்—அவரே உருவான அண்ணு அவர்கள் !

மக்கள், காங்கிரசுக்காரர்களின் மூர்க்கத்தனமான ஆட்சியை—இலஞ்சலாவண்டி அரசை—காட்டுமிராண்டித் தனமான தர்பார் ஆட்சியை அடையா எம் கண்டுகொண்டு, அவர்கள் முகமூடியைக் கிழித்துக் காட்டி ஸ்ரீகள் — சென்ற பிப்ரவரித் திங்களில் !

1837-லிருந்தே இந்தியை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது ! இன்று அந்தப் போராட்டம், மானவர்களின் கையிலிருந்து தமிழக அரசின் கைக்கு வந்திருக்கிறது ! அதனுல்தான் இந்தத் தமிழக மண்ணிலிருந்து இந்திய விரட்டியடித்துக் காட்டியது !

கட்டத்தில் பெரும்திரளான மக்கள் முழுமியிருந்தனர் ; 'தாய்மார்கள் கட்டம், இதுவரை இப்படிக் கடியதில்லை' என்று சொல்லத் தக்க அளவுக்குத் திரண்டிருந்தது.

மாவட்டம் முழுவதிலுமிருந்தும் ஆயிரக்கணக்கில் மானவர்கள் கலந்துகொண்டனர்.

மானவர்கள் சந்திப்பு

கட்டம் துவக்கப்படுவதற்கு முன்பு சேலம் கல்லூரி—உயர் நிலைப் பள்ளிகளின் மானவர்கள், தமிழக உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களைச் சந்தித்த ரீண்டநேரம் உரையாடினர் ; இக்கிய ஒழித்த அண்ணுவின் ஆட்சியை அவர்கள், ஒரு முகமாகப் பாராட்டினர்.

பொதுக்கூட்டத்தில் சேலம் நகர சட்டமன்ற உறுப்பினர் களான தோழர்கள் கே. செவராமன், ஈ. ஆர். கிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் க. இராசாராம், உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் ஆகியோர் இந்தி ஒழிப்புக்காக இன்னல்கள் ஏற்றும், இன்னுயிரை இழந்தும் தியாகிகளாகத் தமிழர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டவர்களுக்கு வீரவணக்கத்தைத் தெரிவித்து உரையாற்றினர்.

தாழையூத்தில் தொழிலாளர் அறப்போர்

தாழையூத்து இந்தியா சிமெண்டு கம்பெனி நிர்வாகம் தொழிலாளர்களின் கோரிக்கை களை நிறைவேற்ற மறுப்பதால், தொழிலாளர்களின் கோரிக்கை கள் நிறைவேற சங்கத்தின் பொதுச்செயலாளரும் தாழை யூத்து தி.மு.க. செயலாளருமான அ. சங்கிரனும், நெல்லை மாவட்ட தி.மு.க. தொழிற்சங்கச் செயற் குழு உறுப்பினர் இரா. புலியூர் ஆகியோர் உண்ணு உள்ளிட்ட 6 வகை கோரிக்கைகளை முன்வைத்து 28—1—68 முதல் சாகும்வரை உண்ணு நோன்பு இருந்துவருகின்றனர்.

நடக்க இருப்பவை

1--2--68

தாணிக்கோட்டகம்

தி. மு. க. சார்பில் அண்ணு படிப்பகத் திறப்பு விழா ; மாலை 6-30 மணிக்கு கடைத் தெரு வில் ; தலைவர் : வே. வேலாயுதம் ; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.ஏ., ந. தருமலிங்கம் எம்.எல்.ஏ., ப. முருகு எம்.ஏ., சிவ. கனகசுந்தரம், மா. மீனுட்சி சுந்தரம், இரா. சங்கரன்.

கண்ணதாசனுக்குத் தண்டனை

அமைச்சர் கருணநிதி பற்றி அவதூறு எழுதினர்

சென்னை, சன. 29—

'ஈவசக்தி' என்ற நாளிதழ்மீது தமிழக அரசு தொடுத்திருந்த வழக்கில், இன்று, குற்றவாளி களுக்குத் தண்டன விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேற்படி இதழில் அமைச்சர் கருணநிதி பற்றி அவதூருன கட்டுரை எழுதி வெளியிட்டதற்காக, கட்டுரையை எழுதிய கண்ணதாசன், வெளியிட்டாளர் தனுஷ்கோடி ஆகிய இருவரும் குற்றவாளிளே எனத் தீர்மானிக் கப்பட்டுத் தண்டனையளிக்கப்பட் டது.

கண்ணதாசனுக்கு ரு. 500 அபராதம் — கட்டத் தவறினுல் இரண்டு திங்கள் சிறைவாசம் ஏற்க வேண்டும் என்று தீர்ப்பளிக் கப்பட்டது.

இரண்டாவது எதிரியான தனுஷ் கோடி வெளியிட்டாளர் எனப தால், அவர், குற்றம்புரிந்தவர்கள் கன்டனத்தைப் பொறுப்பில் விடு விப்பதற்குரிய விதிப்படி—ஓராண் டுக்கால நன்னடத்தைப் பொறுப்பு உறுதியளித்துச் செல்லுமாறு கூறி விடுவித்தார் நீதிபதி.

இவ்வழக்கில், மேற்படி இதழின் கௌரவ ஆசிரியராக ஈ. வி. கே. சம்பத் மீதும் குற்றஞ்சாட்டப்பட் டிருந்தது. பின்னர், குற்றஞ்சாட் டப்பட்டவர்களின் வாக்குமூலங் களைப் பதிவு செய்தலையடுத்து, அவரை நீதிபதி விடுவித்துவிட் டார்.

'குல்லாய் போடுகிறார் கருண நிதியார்' என்ற தலைப்பில் கண்ண தாசன் எழுதிய மேற்படி கட்டுரை அமைச்சரை அவதூறு செய் கிறது என்பது தெரிவிக்கிறது' என்று, நீதிபதி திரு. என். எஸ். இராமசாமி தமது தீர்ப்பில் குறிப் பிட்டுள்ளார்.

இவ்வழக்கில், தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலளர் மன்னை நாராயணசாமி, தெ. ஆ. மாவட்டச் செயலளர் இரா. சாம்பசிவம், மயிலம் பகுதிச் செயலளர் எஸ். வி. வேலு, சென்னை மாவட்டச் செயலளர் மீகாராமனன் ஆகியோர் அரசு தரப்புச் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். மூலவராது சாட்சியாக அமைச்சரே விசாரிக்கப்பட்டார்.

அரசுத் தரப்பில், வழக்கறிஞர் பி. ஆர். கோகுலகிருட்டினன், இராசமாணிக்கம், கே. ஏ. திருஞானசம்பந்தம், குற்றஞ் சாட்டப்பட்டவர் சார்பில் வி. பி. இராமலுங் வாதிட்டார்கள்.

மைசூரில் இந்தி எதிர்ப்பு

கடை மீறிய மாணவர்மீது போலீசார் தடியடி -- கண்ணீர்ப்புகை வீச்ச

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் ப

மைசூர், சன. 29—

இந்தி எதிர்ப்பினையொட்டி ஊர்வலமாகச் சென்ற கட்டுமீறி கூட்டத்தைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபட்ட மைசூர் போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்யவும் நேரிட்டது.

12 ரவுண்டுகள் போலீசார் சுட்டதால் ஒருவர் மாண்டதாக வும் ஐவர் காயமடைந்தனர் என்றும், ஏழு பேர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

'மைசூர் பந்த்' காரணமாகக் கடைகள்—திரைப்படக் கொட்டகைகள்—தொழில் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

கல்லூரிகள் அனைத்தையும் 31-ம் நாள் வரையில் மூடிவிடு படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தி எதிர்ப்பு முழக்கமிட்டு ஊர்வலமாகச் சென்றவர்கள், போலீசார் மீதும் — வண்டிகள் மீதும் கல்லெறிந்ததாகக் கூறப் பட்டிருக்கிறது.

தடையுத்தரவை மீறி இரண்டா யிரம் மானவர்களுக்கும் அதிக மானவர்கள் ஊர்வலமாகச் செல் லுகையில், அவர்களைக் கலைத்து போகமாறு போலீசார் எச்சரித் தனர் ; அதனை அவர்கள் ஏற்க வில்லை ; உடனே போலீசார் தடி யடி நடத்தி, கூட்டத்தைக் கலைத் துள்ளனர்.

சுமார் 500 மானவர்கள் தடையை மீறி பல்லேக் சமுகத் கட்டிடத்திறகு அருகில் சென்று கொண்டிருக்கையில் போலீசாருக் கும்—அவர்களுக்குமிடையில் மோதலுக் ஏற்பட்டதாம் ; வன் முறைச் செயல்கள் அளவுக்கு மீறியதாம் ; இதஞல் போலீசார் தடியடி நடத்தினர்—கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர்.

மெர்க்காராவில் வேலை நிறுத்தம்

மெர்க்காராவில் இன்று 'அர்த் தால்' மேற்கொள்ளப்பட்டதால்,

தமிழ்க் கல்வெட்டு ஆராய்ச்சி வகுப்பு

சென்னை நக்கீரர் கழகமும் வள்ளுவர் தமிழ்க் கல்லூரி சார் பில் தமிழக கல்வெட்டு வகுப்பு 1—2—68 மாலை 6-15 மணிக்கு துவக்கப்படும் ; கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் திரு. சுந்தரே வனிலையார் இவ்வகுப்பைத் தொடங்கி நடத்துவார்.

இவ்வகுப்பு 15 நாட்களுக்கு ஒரு முறை நடைபெறும் ; இடம் :— 'ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளி, 44, பவழக்காரத் தெரு, சென்னை—1' என்று, பொதுச் செயலளர் சிறுவை மோகனசுந் தரம் அறிவிக்கிறார்.

கடைகள்—கல்லூரிகள்—பள்ள கள் அனைத்தும் மூடப்பட்டன.

கல்லூரி—பள்ளி மானவர்கள் இந்திக்கு எதிராக முழக்கமிட்டு ஊர்வலமாகச் சென்றனர்.

பெங்களூர் மாணவர்கள்மீது கண்ணீர்ப்புகை வீச்ச

பெங்களூர், சன. 29—

பெங்களூரில், இந்தி எதிர்ப்பு முழக்கங்களுடன் சென்று கொண் டிருந்த மானவர்களைக் கலைப்பதற் காகப் போலீசார் நடியடி நடத்தி னர்—கண்ணீர்ப்புகைக் குண்டு களை வீசினர் !

மானவிகள் பலர், கண் ணீர்ப்புகைக் குண்டு வீச்சிலும் நிலைமிழந்து விழுந்தனர்.

ஆறு இடங்களில் போலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி யுள்ளனர்.

சம்பவத்திற்குப் பின், பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டன ; கடை கள் வெறிச்சோடிக் கிடந்தன.

சம்பவங்கள் கடைபெற்ற வழ களில் சென்று கொண்டிருந்த பல கள் அனைத்தும் திசைமாறிவிட் பட்டன.

ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு

ஐதராபாத், சன. 29—

ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி தீவிரமாவருகிறது.

செல்லூரில் கேற்று மட்டும் ஆறு இரயில வண்டிகள் மானவர் களால் தடுத்து நிறுத்தப்பட்டிரு கின்றன.

மற்றும் பல மாவட்டங்களிலு இந்தி எதிர்ப்பினையொட்டிப் பல வேறு சம்பவங்கள் கடைபெற்றுள் ளன.

பல பகுதிகளில், பள்ளிகளும் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின் றன.

தலைமையமைச்சர்—முதலமைச் சர உருவங்கள் கொளுத்தப்பட்டி ருக்கிறது.

கலைப் பாடங்கள் அனைத்தும் தமிழில்!

அறிவியல் பாடங்களையும் தமிழில் கற்பிக்க ஆய்வு

கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, சன. 29—

அடுத்த ஆண்டு முதல், அரசினர் கல்லூரிகளில் கலைத் துறைப் பாடங்கள் தமிழில் கற்பிக்கப்படும் என்றும், அறிவியல் துறைப் பாடங்களையும் தமிழில் கற்பிப்பது பற்றி ஆலோசிக்கப் படும் என்றும், கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது :—

"தமிழகத்தில் மொத்தம் 23 அரசினர் கல்லூரிகளும், 114 தனி யார் கல்லூரிகளும் உள்ளன. தனி யார் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் தமிழில் கற்பிக்கத் தொடங்குமாறு கேட்டுக் கொள் ளப்படும். இப்போதே பெரும் பாலான தனியார் கல்லூரிகளில் தமிழ் மூலம் கற்பிக்க ஒரு பிரிவு உள்ளது. இதைப் படிப்படியாக நேலவகுகேற்ப அதிகரித்துக் கொள்ளலாம்.

புகுமுக வகுப்பில் ஆங்கிலத்தில் கல்வி கற்றவர்கள் அதிலேயே தொடர்ந்து மூன்ருண்டுப் பட்டப் படிப்பை முடிக்க அனுமதிக்கப்படு வார்கள்.

அரசினர் கலைக் கல்லூரிகளில் அடுத்த ஆண்டு முதல் பாடங்கள் தமிழில் கற்றுக் கொடுக்கப்படும். அறிவியல் நீங்கலாக மற்ற எல் லாப் பாடங்களும் தமிழில் கற்றுத் தரப்படும்.

விஞ்ஞானப் பாடத்தையும், தமி ழில் கற்றுக் கொடுப்பது என்ற அனவுக்கு சாத்தியமானது என் பதை வருகிற பிப்ரவரி 5-ம் நாள் நடைபெறும் பல்கலைக் கழகத் தேனேஜர்கள்—கல்லூரி முதல் வர்களின் கூட்டத்தில் ஆலோ சித்து முடிவு செய்யப்படும்.

புகுமுக வகுப்பில் தமிழில் கல்வி பயின்றவர்கள், பட்டப் படிப்பை தமிழிலேயே கற்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

தமிழிலேயே படிதது தேறிய 'பி.ஏ.' பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பற்றி இப் போதே ஆலோசித்து வருகிறோம்.

சித்தூரில் 40-பேர் கைது

சித்தூர், சன. 29—

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் சித்தூரில், கடந்த 27-ம் நாள் நடைபெற்ற சம்பவத்தையொட்டி 40-பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

15-நாட்கள்வரையில் அவர் கிளக் காவலில் வைக்கப்படுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திரு. இரா. நெடியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடு ராகவும், அறிவுலகமாகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூளியாரா வன் செட்டித் தெரு, சென்னை-1) அச்சிடு வெளியிடப்படுகிறது.